# ஆச்சாரியாருக்கு கறுப்புக்கொடி.

## நகரின் பல பாகங்களிலிருந்தும் ஊர்வலங்கள்.

### போலீசார் தடை.

### கேள்விகளுக்கு ஆச்சாரியாரின் பதில் இல்லை.

(நமது நிருபர்)

சேலம், ஜூன். 8,

நேற்று மாலை ஹரூரிலிருந்து கனம் ஆச்சாரியார் விளம்பா மந்திரியோடு மீண்டும் சேலம் வந்தார். நேற்றைய தினம் டவுன் காங்கரஸ் கமிட்டியார் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் மந்திரிகள் பேச பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததினால் ஷை பொதுக்கூட்டத்தில் பதில் சொல்லுமாறு ஹிந்தி எதிர்ப்பு ஜில்லா கமிட்டியின் 18 கேள்விகளை அச்சிட்டு நகரெங்கும் விநியோகம் செய்ததோடு, ஆச்சாரியாருக்கும் அனுப்பப் பட்டது. கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார் என்பதைப் பார்க்கவும் நகரின் பல பாகங்களிலிருந்து கிளம்பிய கறுப்புக் கொடி ஊர்வலங்களைப் பார்க்கவும் மக்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

மாலை 5 மணிக்கு நகரின் மேற்குக் கோடியாகிய செவ்வாய் பேட்டை சுயமரியாதை சங்கத்திலிருந்து ஜில்லா ஹிந்தி எதிர்ப்புக்காரியக் கமிட்டித் தலைவரும் பேளுக்குறிச்சி மிட்டாதாரரும் ஜில்லா அர்பன் பாங்கு டைரக்டருமான தோழர் ஜி.பி. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் சுமார் 10000 தொண்டர்கள் கறுப்புக் கொடியேந்தி 'ஹிந்தி வீழ்க' 'தமிழ் வாழ்க' 'ஆச்சாரியாரே திரும்பிப்போ' என்னும் கோஷங்களுடன் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக புறப்பட்டது. இந்த ஊர்வலம் சுமார் 1 பர்லாங்கு தூரம் வரை தொண்டர்கள் அணிவகுத்து வந்த காட்சியானது பொதுமக்கள் கவனத்தை மிகவும் கவர்ந்தது. நகரின் கிழக்குகோடியாகிய அம்மாபேட்டையிலிருந்து இதே மாதிரி மற்றோர் ஊர்வலம் கறுப்புக்கொடிகள் தாங்கி அம்மாபேட்டை தென்னிந்திய நலவுரிமைச்சங்கத்திலிருந்து புறப்பட்டு பொன்னம்மாபேட்டை ஜஸ்டிஸ் தியாகராய வாலிப சங்கத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தோடு சேர்ந்து அதுவும் விக்டோரியா மார்க்கட் மைதானத்தை அடைய வந்துகொண்டிருந்தது. நகரின் தெற்கு கோடியாகிய தாதகாப்பட்டியிலிருந்தும் அதே மாதிரி கறுப்புக்கொடி ஊர்வலமொன்றும் புறப்பட்டு மைதானத்திற்கு வந்துகொண்டிருந்தது. இந்த ஊர்வலங்களோடு ஹிந்தி எதிர்ப்பு அனுதாபிகளும் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர். கமிட்டியாரின் தலைமையில் வந்த ஊர்வலமும், சேலம் பாலத்திற்கு சமீபத்தில் வந்ததும், ஒரு சப் இன்ஸ்பெக்டரின் தலைமையில் ஒரு போலீஸ் படை வந்து ஊர்வலத்தைத் தடுத்து ஊர்வலம் மேற்கொண்டு செல்லக் கூடாதென்று தடுத்துவிட்டார். அதேமாதிரி அம்மாபேட்டை ஊர்வலத்தையும் தாதகாப்பட்டி ஊர்வலத்தையும் முறையே வீரபத்திரசாமி கோவில் அருகாமையிலும் குகையிலும் நிறுத்திவிட்டார்கள். ஊர்வலத்தை தடை செய்ததற்கு எழுத்துமூலமான உத்தரவு கொடுக்கும்படி கமிட்டி ஊர்வலத்தார் போலீசைக் கேட்டதில் ஷை ஸ்தலத்திற்கு ஜில்லா போலீஸ் சுபரிண்டும், டிப்டி சுபரிண்டும் வந்து அதுமாதிரியான எத்தகைய உத்தரவும் கொடுக்க முடியாதென்றும் ஊர்வலம் மார்கட் மைதானத்திற்குப்போனால் கலவரம் ஏற்படுமென்று தாங்கள் கருதுவதினால் தாங்கள் தடைப்படுத்தி விட்டதாகவும் தெரிவித்து விட்டார்கள். அதனால் ஊர்வலக்காரர்கள் அங்கேயே நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தார்கள். இதை வேடிக்கை பார்க்க சுமார் 5000-க்கு மேல்பட்ட மக்கள் ரோட்டில் கூடிவிட்டனர். ஊர்வலக்காரர்கள் ஆர்பாட்டம் செய்தவண்ணம் நின்றிருந்த சமயம் மந்திரி கனம் ஆச்சாரியார் அவ்வழி வரவும், ஊர்வலக்காரர்களும் அங்கு கூடியிருந்த பொதுஜனங்களும் "ஆச்சாரியாரே திரும்பிப்போ" என்ற கோஷங்கள் வானைப் பிளக்கும்படி செய்தனர்.

பலத்த போலீஸ் பந்தோபஸ்துகளிடையில் மார்க்கட்டை அடைந்த ஆச்சாரியார் வழக்கம் போல் மதுவிலக்கு கடன் நிவாரண மசோதா முதலியவற்றைப் பற்றி பேசினாரே ஒழிய ஹிந்தியைப் பற்றி மக்களுக்கு திருப்த சமாதானம் ஒன்றும் சொல்லாததோடு எதிர்ப்பு கமிட்டியாரின் கேள்விகளுக்கும் நேரமில்லை என்று காரணம் காட்டி பதில் கூறாது போய் விட்டார். கேள்விகளுக்குப் பதில் கூறாததினால் பொது மக்கள் ஆச்சாரியார் கூட்டத்தை விட்டு பலர் வெளியேறி விட்டனர். கூட்டம் அமைதியில்லாமல் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக நின்று பேசிக்கொண்டு இருந்தனர். ஊர்வலக்காரர்கள் நின்றிருந்த வழியிலேயே கூட்டம் முடிந்த பின் திரும்ப வேண்டிய ஆச்சாரியார் ஊர்வலக்காரர்களின் ஆர்பாட்டங்களுக்கு வெட்கி வேறு வழியில் சென்று விட்டார். அவர் சென்ற செய்தி தெரிந்த பிறகு ஊர்வலக்காரர்கள் தங்கள் தங்கள் புறப்பட்ட இடங்களுக்கு கோஷங்களுடன் திரும்பினர். நகரெங்கும் கறுப்புக் கொடி ஊர்வலங்களைப் பற்றியும், அவர்களின் கேள்விகளுக்கு ஆச்சாரியார் பதில் கூறாததைப் பற்றியுமே பேச்சாயிருக்கிறது.

கனம் ஆச்சாரியார் இறங்கியிருப்பது டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்கு சத்திரத்தில். ஷை பாங்கு டைரக்டர்களில் ஒருவராகிய தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களே தலைமை வகித்து பகிஷ்காரர் ஊர்வலங்களை நடத்தி வருகிறார். இதைக் குறித்து ஆச்சாரியாருக்கு ஏற்பட்ட மரியாதைகளைப் பற்றி நகர மக்கள் மிகவும், கேவலமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள்.

ஆச்சாரியாரின் சொந்த ஜில்லாவில் அவருக்கு சென்றவிடமெல்லாம் கறுப்புக் கொடி தான்.

இந்

எஸ். டி. 

இன்றே பரீக்ஷியுங்கள். உத்